Click Here to Learn more : https://bit.ly/3in2Hd4

# பொது அறிவு

பாடவாரியாக கொள்குறி வினாக்கள்
விளக்கமான விடைகளுடன்

* வரலாறு
* அரசியலமைப்பு
* புவியியல்
* பொருளாதாரம்
* அறிவியல்
* பொது அறிவு
* முக்கியக் குறிப்புகள்

www.surabooks.com

Click Here to Learn more : https://bit.ly/3in2Hd4

Click Here to Learn more : https://bit.ly/3in2Hd4

# வரலாறு

1. **மந்திரங்கள் தொடர்பான பாடல்கள் அமைந்துள்ள வேதம் எது?**
   A) ரிக் வேதம் B) யஜூர் வேதம்
   C) சாம வேதம் D) அதர்வண வேதம்

**விளக்கம் :** **விடை : A**
✦ ரிக் வேதத்தில் மந்திரங்கள் தொடர்பான 1028 பாடல்கள் அமைந்துள்ளன.
✦ யஜூர் வேதத்தில் சடங்குகளின் போது பின்பற்றுவதற்கான பல்வேறு விவரங்கள் கூறப்பட்டுள்ளன.
✦ சடங்கில் இசைப்பதற்காக உருவாக்கப்பட்ட சாமவேதத்திலிருந்துதான் இந்திய இசைக்கலை தோன்றியதாகக் கருதப்படுகிறது.
✦ பல்வேறு சடங்குகள் பற்றியும் பில்லி, சூனியங்கள் பற்றியும் அதர்வண வேதம் கூறுகிறது.

2. **பிந்துசாரருடைய ஆட்சிக் காலத்தில் அசோகர் கீழ்க்கண்ட எந்தப் பகுதிக்கு ஆளுநராக நியமிக்கப்பட்டார்?**
   A) தக்ஷசீலம் B) கோசலம்
   C) உஜ்ஜயினி D) சுவர்ணகிரி

**விளக்கம் :** **விடை : A**
✦ மௌரியப் பேரரசு 4 மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

| மாநிலம் | | தலைநகர் |
|---|---|---|
| வடமேற்கு மாநிலம் | – | தக்ஷசீலம் |
| கீழ்த்திசை மாநிலம் | – | கோசலம் |
| மேல்திசை மாநிலம் | – | உஜ்ஜயினி |
| தென் மாநிலம் | – | சுவர்ணகிரி |

3. **'எல்லோரா'வில் கைலாசநாதர் கோயிலைக் கட்டியவர் யார்?**
   A) தண்டி துர்க்கா B) கோவிந்தா–III
   C) கிருஷ்ணா–I D) துருவா

**விளக்கம் :** **விடை : C**
✦ முதலாம் கிருஷ்ணர், (கி.பி. 756-775) புகழ் பெற்ற எல்லோராவின் கைலாசநாதர் குடைவரைக் கோயிலை உருவாக்கினார்.

4. **'மத்தவிலாச பிரகசனம்' என்ற வடமொழி நூலை இயற்றியவர்**
   A) இராஜசிம்மன் B) முதலாம் மகேந்திரவர்மன்
   C) சிம்மவிஷ்ணு D) முதலாம் நரசிம்மவர்மன்

**விளக்கம் :** **விடை : B**
✦ முதலாம் மகேந்திரவர்மனின் ஆட்சிக்காலம் கி.பி. 600 முதல் கி.பி. 630 வரையாகும். இவர் மத்தவிலாச பிரகசனம் எனும் நகைச்சுவை நாடகத்தை வடமொழியில் இயற்றியுள்ளார்.
✦ இவர் உருவாக்கிய கோயில்கள் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் உள்ளன. இவருக்கு வழங்கப்பட்ட 'சித்திரக்காரப்புலி' என்ற பட்டம் இவரின் ஓவிய ஆர்வத்தைக் காட்டுகிறது. குடுமியான் மலை இசைக் கல்வெட்டு இவரது காலத்தில் உருவாக்கப்பட்டதாகும்.

5. **தலைக்கோட்டைப் போரில் விஜயநகரத் தளபதி இராமராயரைக் கொலை செய்த பாமினி சுல்தான் யார்?**
   A) ஹூசேன் நிஜாம் ஷா B) முகமது ஷா
   C) இமாத் ஷாஹி D) அலாவுதீன் பெஹன் ஷா

**விளக்கம் :** **விடை : A**
✦ விஜயநகரத்தின் ஆதிக்கத்தினை எதிர்க்க பீஜப்பூர், அகமத் நகர், பீரார், கோல்கொண்டா சுல்தான்கள் ஒன்றுகூடி படையெடுத்தனர்.
✦ கி.பி. 1565–இல் நடந்த தலைக்கோட்டைப் போரில் ஹூசேன் நிஜாம் ஷா இராமராயரைக் கொலை செய்தார்.

6. **'வங்கப்புலி' என்றழைக்கப்பட்ட ஆங்கிலேய கவர்னர்**
   A) வாரன் ஹேஸ்டிங்ஸ் B) காரன் வாலிஸ்
   C) வெல்லெஸ்லி D) டல்ஹௌசி

**விளக்கம் :** **விடை : C**
✦ பிரிட்டிஷ் இந்தியப் பேரரசை உருவாக்கும் தனது குறிக்கோளை அடைய வெல்லெஸ்லி பின்பற்றிய திட்டம் துணைப்படைத் திட்டமாகும். இவர் 'வங்கப்புலி' என்றழைக்கப்பட்டார்.

7. **'நியூ இந்தியா' என்ற பத்திரிகையை நடத்தியவர்**
   A) காந்தியடிகள் B) பாரதியார்
   C) பாலகங்காதர திலகர் D) அன்னிபெசண்ட்

**விளக்கம் :** **விடை : D**

| | | |
|---|---|---|
| ✦ அன்னிபெசண்ட் | – | நியூ இந்தியா |
| ✦ காந்தியடிகள் | – | யங் இந்தியா |
| ✦ பாரதியார் | – | இந்தியா |
| ✦ பாலகங்காதர திலகர் | – | மராத்தா ; கேசரி |

8. **மதம் மாறிய இந்துக்களை திரும்பவும் இந்து சமயத்திற்கு கொண்டு வருவதற்கு தயானந்த சரஸ்வதி ஆரம்பித்த இயக்கம்**
   A) இந்து இயக்கம் B) மக்கள் இயக்கம்
   C) வேத இயக்கம் D) சுத்தி இயக்கம்

**விளக்கம் :** **விடை : D**
✦ கி.பி. 1875–இல் சுவாமி தயானந்த சரஸ்வதியால் ஆரிய சமாஜம் தோற்றுவிக்கப்பட்டது. இவர் வேதங்களை மதித்தார். ஆனால் புராணங்களைப் புறக்கணித்தார். மதம் மாறிய இந்துக்களை மீண்டும் இந்துக்களாக மாற்றுவதற்கு 'சுத்தி இயக்கம்' இவரால் நிறுவப்பட்டது.

9. **கீழ்க்கண்ட எந்த நூல் கிருஷ்ணதேவராயரால் இயற்றப்பட்டது?**
   A) மனுசரித்திரம் B) பாரிஜாதபரணமு
   C) அமுக்த மால்யதா D) மதுரா விஜயம்

**விளக்கம் :** **விடை : C**
✦ விஜயநகரப் பேரரசரான கிருஷ்ண தேவராயரால் 'அமுக்த மால்யதா' என்ற தெலுங்கு நாடகநூல் இயற்றப்பட்டது. மேலும் இவர் 'ஜாம்பவதி கல்யாணம்', 'உஷா பரிணயம்' என்ற சமஸ்கிருத நாடகங்களையும் இயற்றியுள்ளார்.

10. **சந்திரகுப்த மௌரியர் அவைக்கு வந்த அயல்நாட்டுப் பயணி யார்?**
   A) யுவான்சுவாங் B) மெகஸ்தனீஸ்
   C) இட்சிங் D) நிகோலோகோண்டி

**விளக்கம் :** **விடை : B**
✦ சந்திரகுப்த மௌரியர் காலத்தில் இந்தியாவிற்கு வந்த மெகஸ்தனீஸ் கிரேக்க நாட்டின் தூதுவர் ஆவார். அவர் எழுதிய இண்டிகா என்ற நூலில் மௌரியர் ஆட்சி முறை, நிர்வாகம், மக்களின் பழக்கவழக்கங்கள் பற்றி தெளிவாக எழுதியுள்ளார்.
✦ மௌரியர் ஆட்சிக் காலம் பற்றி அறிய உதவும் முக்கியச் சான்றுகளில் ஒன்றாக 'இண்டிகா' திகழ்கிறது.

11. **மாமல்லன் என்று அழைக்கப்படும் பல்லவ மன்னன்,**
   A) முதலாம் மகேந்திரவர்மன்
   B) முதலாம் நரசிம்மவர்மன்
   C) இராஜசிம்மன்
   D) முதலாம் பரமேஸ்வரவர்மன்

**விளக்கம் :** **விடை : B**
✦ முதலாம் மகேந்திரவர்மனின் மகன் முதலாம் நரசிம்மவர்மன் ஆவார். இவர் மற்போரில் வல்லவர் என்பதால் மாமல்லன் என்று அழைக்கப்பட்டார். தனது தந்தை அடைந்த தோல்விக்கு பழி தீர்க்க சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியைத் தோற்கடித்து, வாதாபியைத் தீயிட்டுக் கொளுத்தியதால் 'வாதாபி கொண்டான்' என்றும் அழைக்கப்பட்டார்.



Click Here to Learn more : https://bit.ly/3in2Hd4

Click Here to Learn more : https://bit.ly/3in2Hd4



**12. தீன்–இலாஹி என்ற மதத்தைத் தோற்றுவித்த முகலாய மன்னர்,**

A) பாபர் B) ஹுமாயூன்
C) அக்பர் D) ஜஹாங்கீர்

**விளக்கம் :** **விடை : C**

✦ கி.பி. 1556 - 1605 வரை அக்பரது ஆட்சிக் காலமாகும். இந்து – முஸ்லீம் ஒற்றுமைக்காக பாடுபட்ட அவர் இரு மதங்களின் சிறந்த கொள்கைகளை இணைத்து தீன்–இலாஹி என்ற புதிய மதத்தைத் தோற்றுவித்தார். ஆனால் அவரது காலத்திற்குப் பின் அம்மதம் முற்றிலுமாக அழிந்துவிட்டது.

**13. 12–ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் விசிஷ்டாத்வைதம் என்ற கோட்பாட்டை பரப்பியவர்,**

A) இராமானந்தர் B) இராமனுஜர்
C) கபீர் D) வல்லபாச்சாரியார்

**விளக்கம் :** **விடை : B**

✦ இராமனுஜர் சென்னைக்கு அருகிலுள்ள ஸ்ரீபெரும்புதூரில் பிறந்தவர் ஆவார். இவருடைய கோட்பாடான 'கடவுள், ஆன்மா, பொருள் அனைத்தும் உண்மைகளே; ஆனால் கடவுள் மனத்துக்கண் உள்ளது. ஏனைய அனைத்தும் கடவுளின் குணாதிசயங்கள்' என்பவை விசிஷ்டாத்வைதத்தின் கோட்பாடுகளாகும். உயர்குலம், தாழ்ந்த குலம் என்ற வேறுபாடுகளை மறுத்தார்.

**14. மங்கள் பாண்டே ——————— படைப்பிரிவைச் சேர்ந்தவர்.**

A) வங்காளம் B) மும்பை
C) தமிழ்நாடு D) டில்லி

**விளக்கம் :** **விடை : A**

✦ இந்தியப் படை வீரர் மங்கள்பாண்டே, வங்காளப் படைப்பிரிவைச் சேர்ந்தவர். இவர் கொழுப்புத் தடவிய தோட்டாவை உபயோகிக்க மறுத்தார். மீண்டும் கட்டாயப்படுத்திய தனது மேலதிகாரியைச் சுட்டுக் கொன்றுவிட்டார். அதனால் மங்கள் பாண்டே ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டார். இந்நிகழ்வு 1857 பெரும்புரட்சியின் துவக்கமாகக் கருதப்படுகிறது.

**15. 'மெயின் கேம்ப்' என்ற நூலை எழுதியவர்**

A) முசோலினி B) ஹிட்லர்
C) ஹிண்டன்பர்க் D) நிவில் சேம்பர்லைன்

**விளக்கம் :** **விடை : B**

✦ 'பீர் மண்டபப் புரட்சியில் தோல்வியடைந்த ஹிட்லர் தேசத்துரோகக் குற்றத்திற்காக 5 ஆண்டுகள் சிறையில் இருந்தபோது 'மெயின்கேம்ப்' என்ற நூலை அவர் எழுதினார். 'எனது போராட்டம்' என்பது அதன் பொருளாகும். இந்நூல் நாசிசத்தின் வேதநூலாக விளங்கியது.

**16. 'பஞ்சாப் சிங்கம்' என்று அழைக்கப்பட்டவர்**

A) பாலகங்காதர திலகர் B) பகத்சிங்
C) லாலா லஜபதி ராய் D) சர்தார் வல்லபாய் படேல்

**விளக்கம் :** **விடை : C**

✦ 'பஞ்சாப் சிங்கம்' என்று அழைக்கப்பட்டவர் லாலா லஜபதி ராய். சைமன் குழுவிற்கு எதிர்ப்பு தெரிவித்து, 1928 அக்டோபரில் லாகூர் நகரில் மேற்கொண்ட அமைதி போராட்டம் மீது, காவலர்கள் நடத்திய தடியடியில் பலத்த காயமுற்று உயிரிழந்தார்.

**17. வங்கப் பிரிவினையின் போது வைசியராயாக இருந்தவர்,**

A) டல்ஹௌசி B) காரன்வாலிஸ் பிரபு
C) ரிப்பன் பிரபு D) கர்சன் பிரபு

**விளக்கம் :** **விடை : D**

✦ வங்கப் பிரிவினையானது கர்சன் பிரபு வைசியராயாக இருந்த பொழுது 1905 ஜுலையில் அறிவிக்கப்பட்டது. 1905 அக்டோபரில் பிரிவினை நடந்தது. 1911 ஆம் ஆண்டில் ஹார்டிஞ்ச் பிரபு இந்தியாவின் வைசியராக இருந்தபொழுது வங்காளம் மீண்டும் ஒருங்கிணைக்கப்பட்டது.

**18. ரெட் கிளிஃப் கோடு இந்தியாவை எதனிடமிருந்து பிரிக்கிறது?**

A) சீனா B) நேபாளம்
C) பூட்டான் D) பாகிஸ்தான்

**விளக்கம் :** **விடை : D**

✦ இந்தியா பாகிஸ்தான் பிரிவினையைக் குறிக்கும் எல்லை வரையறையாக, 16 ஆகஸ்ட், 1947 ரெட் கிளிஃப் கோடு அறிவிக்கப்பட்டது.

✦ எல்லையை வரையறை செய்த வல்லுநரின் பெயர் சர் ஸ்ரில் ரெட் கிளிஃப் என்பதால் அவர் பெயரே அக்கோட்டிற்கு வைக்கப்பட்டது.

**19. கீழ்க்கண்ட நபர்களில் இயற்கையான முறையில் மரணமடைந்தவர் யார்?**

A) இந்திராகாந்தி B) இராஜீவ் காந்தி
C) சஞ்சய் காந்தி D) ஜவஹர்லால் நேரு

**விளக்கம் :** **விடை : D**

✦ **ஜவஹர்லால்நேரு** : 1964 மே 27 அன்று உடல்நலக் குறைவு காரணமாக உயிரிழந்தார்.

✦ **சஞ்சய் காந்தி** – 1980 ஜுன் 23 அன்று விமான விபத்தில் இறந்தார்.

✦ **இந்திராகாந்தி** : 1984 அக்டோபர் 1 அன்று சீக்கிய பாதுகாவலர்களால் சுடப்பட்டு இறந்தார்.

✦ **இராஜீவ் காந்தி** – 21 மே 1991 இல் இலங்கைத் தமிழர் பிரச்சனை காரணமாக மனித வெடிகுண்டால் கொல்லப்பட்டார்.

**20. 'வஜ்ராயனா' என்பது எதனுடைய பிரிவாகும்?**

A) புத்தமதம் B) ஜைனமதம்
C) இந்துமதம் D) தாவோயிசம்

**விளக்கம் :** **விடை : A**

✦ புத்தமதத்தில் ஹீனயானம், மகாயானம் என்ற பிரிவுகள் ஏற்பட்ட பின்பு வஜ்ராயானம் என்ற புதிய பிரிவு ஒன்று தோன்றியது. இப்பிரிவில் ஹீனயானம் மற்றும் மகாயானம் இரண்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டன. சைவ சமயத்தின் தாக்கம் கலந்துள்ள இப்பிரிவில் வழிபாட்டுடன் வஜ்ரம், மணி மற்றும் உருத்திராட்சம் போன்ற தியானத்தின் போது எண்ணும் மணிமாலைகள் ஆகியன புனிதமானதாகக் கருதப்பட்டன.

✦ வங்காளத்தை ஆட்சி செய்த பாலர்களின் காலத்தில் இப்பிரிவு செழிப்புற்றிருந்தது. திபெத், பூடான், சீனா மற்றும் ஜப்பானின் ஒரு பகுதி இந்தியாவின் லடாக், நேபாளம், மங்கோலியா ஆகிய இடங்களில் இப்பிரிவு பரவியுள்ளது.

**21. 'இராஜதரங்கிணி' யாரால் எழுதப்பட்டது?**

A) காளிதாஸர் B) கல்ஹனா
C) பாஸ்கரச்சாரியா D) விசாகதத்தர்

**விளக்கம் :** **விடை : B**

✦ 'இராஜதரங்கிணி' என்ற சமஸ்கிருத நூல் காஷ்மீரைச் சார்ந்த கல்ஹனா என்பவரால் இயற்றப்பட்டது. இவருடைய காலம், கி.பி. 12–ஆம் நூற்றாண்டு. இந்நூல் காஷ்மீர் மன்னர்களைப் பற்றியது.

**22. பண்டைய இந்தியாவில் கலிங்கத்தின் தலைநகரமாக விளங்கியது எது?**

A) உஜ்ஜயினி B) தக்ஷசீலம்
C) கோசலம் D) பாடலிபுத்திரம்

**விளக்கம் :** **விடை : C**

✦ பண்டைய இந்தியாவில் கலிங்கத்தின் தலைநகரமாக விளங்கியது கோசலம் (புவனேஷ்வர்)



Click Here to Learn more : https://bit.ly/3in2Hd4

Click Here to Learn more : https://bit.ly/3in2Hd4



- ✦ மௌரிய பேரரசின் மேல்திசை மாநிலத்தின் தலைநகரமாக உஜ்ஜயினி (குஜராத்) இருந்தது.
- ✦ மௌரியப் பேரரசின் தென்திசை மாநிலத்தின் தலைநகரமாக விளங்கியது சுவர்ணகிரி (ஹைதராபாத்)

**23. பிற்காலச் சோழப்பேரரசை நிறுவிய மன்னன்,**

A) விஜயாலயச் சோழன்
B) ஆதித்த சோழன்
C) முதலாம் இராஜராஜசோழன்
D) முதலாம் இராஜேந்திர சோழன்

**விளக்கம் :** **விடை : A**

- ✦ சங்ககால சோழப் பேரரசின் முடிவிற்குப் பின் பல்லவர்களிடம் போர்புரிந்து, வெற்றியடைந்து மீண்டும் உன்னதமான சோழப் பேரரசை நிறுவியவர் விஜயாலயச் சோழன் ஆவார். இவருடைய காலம் கி.பி. 846 – 871. இவருடைய பரம்பரையினர் பிற்காலச் சோழர்கள் எனப்பட்டனர்.

**24. அக்பர் அவையிலிருந்த 'நவரத்தினங்கள்' என அழைக்கப்பட்டவர்களில் கீழ்க்கண்ட நபர்களில் யார் இல்லை?**

A) பீர்பால் B) ஃபைஸி
C) அடில்ஷா D) தோடர்மால்

**விளக்கம் :** **விடை : C**

- ✦ **அக்பரின் அவையிலிருந்த நவரத்தினங்கள்:** அபுல்ஃபாஸல், இராஜாமான்சிங், தான்சேன், இராஜாதோடர்மால், அப்துல் ரஹீம், கான் ஐ–கானா, ஃபஹீர் அஸியோதீன், முல்லா தோ பையாஸா, இராஜா பீர்பால்.

**25. கீழ்க்கண்டவற்றில் எது தவறான இணை?**

A) பாலாஜி விஸ்வநாத் – பேஷ்வா
B) கிருஷ்ண தேவராயர் – சாளுவர்
C) கனிஷ்கர் – குஷாணர்
D) ஹர்ஷர் – வர்த்தனர்

**விளக்கம் :** **விடை : B**

- ✦ விஜயநகரப் பேரரசின் மன்னராக விளங்கிய கிருஷ்ணதேவராயர் (கி.பி. 1509 – 1530) துளுவ வம்சத்தைச் சேர்ந்தவர். சாளுவ வம்சத்தவர் அல்ல.
- ✦ பாலாஜி விஸ்வநாத் (கி.பி. 1680 – 1720) மராட்டிய சிவாஜியின் காலத்திற்குப் பின்பு மராட்டியத்தில் பேஷ்வாக்களின் ஆட்சியைத் தோற்றுவித்தார்.
- ✦ கனிஷ்கர் (கி.பி. 78 – 102) குஷாண வம்சத்தைச் சேர்ந்தவர். ஹர்ஷர் (கி.பி. 606 –647) வர்த்தன வம்சத்தைச் சேர்ந்தவர்.

**26. 'சுயராஜ்ஜியம் எனது பிறப்புரிமை, அதை நான் அடைந்தே தீருவேன்' என்று முழக்கமிட்டவர்,**

A) மகாத்மா காந்தி B) ஜவஹர்லால் நேரு
C) சுபாஷ் சந்திர போஸ் D) பாலகங்காதர திலகர்

**விளக்கம் :** **விடை : D**

- ✦ 'சுயராஜ்ஜியம் எனது பிறப்புரிமை, அதை நான் அடைந்தே தீருவேன்' என்று முழங்கியவர் பாலகங்காதர திலகர். அவர் 'கேசரி' என்ற பத்திரிகையின் மூலம் பிரிட்டிஷாரின் கொள்கைகளைச் சாடினார்.
- ✦ 'கணபதி' மற்றும் 'சிவாஜி' ஆகிய பண்டிகைகள் மூலம் தேசிய உணர்வைத் தூண்டினார்.
- ✦ 1916–இல் 'தன்னாட்சி இயக்கத்தை' மும்பையில் நிறுவினார். அதே போன்ற அமைப்பை அன்னிபெசன்ட் அம்மையார் சென்னையில் நிறுவினார். இவ்விரு கழகங்களும் சுயாட்சி பெறுவதற்கு மக்களிடையே பிரச்சாரம் செய்தன.

**27. 'வந்தேமாதரம்' பாடல் யாரால் இயற்றப்பட்டது?**

A) இரவீந்திரநாத் தாகூர் B) நஸ்ரூல் இஸ்லாம்
C) நிராலா D) பங்கிம் சந்திர சட்டர்ஜி

**விளக்கம் :** **விடை : D**

- ✦ 'வந்தேமாதரம்' என்ற பாடல் பங்கிம் சந்திர சட்டர்ஜியால் இயற்றப்பட்டது. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் இப்பாடல் பெரும் பங்காற்றியது. 'ஆனந்தமடம்' என்ற இவருடைய நூலில் இப்பாடல் அமைந்துள்ளது.

**28. காஃலிப் என்பவர் ஒரு**

A) புலவர் B) சூஃபித் துறவி
C) ஓவியர் D) அரசர்

**விளக்கம் :** **விடை : A**

- ✦ மிஸ்ரா காலிஃப், உருது மற்றும் பாரசீக மொழிகளில் சிறந்த கவியாகத் திகழ்ந்தவர். பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவில் வேரூன்றிய காலகட்டத்தில், ஆட்சி செய்த முகலாய மன்னர்களின் அவையில் இருந்தார்.

**29. யுவான்–சுவாங் யாருடைய காலத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்தார்?**

A) கனிஷ்கர் B) ஹர்ஷவர்த்தனர்
C) சந்திரகுப்தர் D) ஸ்கந்தகுப்தர்

**விளக்கம் :** **விடை : B**

- ✦ யுவான்சுவாங், ஹர்ஷவர்த்தனர் காலத்தில் இந்தியாவிற்கு வந்தார். தமிழகத்திற்கு அவர் வருகைபுரிந்த போது ஆட்சிசெய்தவர் வாதாபி கொண்ட முதலாம் நரசிம்மவர்மன் ஆவார்.

**30. வாக்பதர் எழுதிய நூல்**

A) பஞ்ச சித்தாந்திகா B) அஷ்டாங்க சம்கிருகம்
C) கிருதார்ச்சுனியம் D) அமரகோஷம்

**விளக்கம் :** **விடை : B**

- ✦ குப்தர்கள் காலத்தில் வாழ்ந்த வாக்பதர் எழுதிய நூல் அஷ்டாங்க சம்கிருஹம் எனும் மருத்துவ நூலாகும். குப்தர்கள் காலத்தைச் சார்ந்த சரகர், சுஸ்ருதர், வாக்பதர் ஆகியோர் மருத்துவ மும்மணிகள் என்றழைக்கப்படுகின்றனர்.

**31. கொரில்லா போர் முறை என்றால்**

A) முறையான போர் முறை
B) பயிற்சி பெற்ற போர் முறை
C) முறைசாரா போர் முறை
D) கலப்பு போர் முறை

**விளக்கம் :** **விடை : C**

- ✦ கொரில்லா போர் முறை என்பது முறைசாரா போர் முறையாகும். இது சத்ரபதி சிவாஜி தலைமையிலான மராத்தியப் படைகளால் சிறப்பாகக் கையாளப்பட்டது.

**32. 'இராமகிருஷ்ணா' மடம் யாரால் நிறுவப்பட்டது?**

A) சுபாஷ் சந்திரபோஸ்
B) சுவாமி விவேகானந்தர்
C) தயானந்த சரஸ்வதி
D) இராமகிருஷ்ண பராமாச்சாரியர்

**விளக்கம் :** **விடை : B**

- ✦ இராமகிருஷ்ணா மடம் 1897–இல் கல்கத்தாவிற்கு அருகிலுள்ள பேலூரில் சுவாமி விவேகானந்தரால் நிறுவப்பட்டது.
- ✦ இந்த மடம் மருத்துவமனைகள், ஆதரவற்றோர் இல்லங்கள், செவிலியர் பயிற்சிப்பள்ளி, கல்வி நிறுவனங்கள் போன்றவற்றை நிறுவி பெருந்தொண்டாற்றி வருகிறது.
- ✦ இயற்கைச் சீற்றங்களின் போது மக்களுக்கு சிறந்த சேவையாற்றி வருகிறது. மேற்கு வங்கத்திலுள்ள சுந்தரவனப் பகுதியில் சூரியஒளி மின்திட்டம் தோன்றுவதற்கு முக்கியப் பங்கு வகித்தது.

**33. 'Drain of Wealth' என்ற கோட்பாட்டுடன் தொடர்புடையவர்**

A) தாதாபாய் நௌரோஜி B) சுபாஷ் சந்திரபோஸ்
C) இக்பால் D) டாக்டர் இராஜேந்திர பிரசாத்



Click Here to Learn more : https://bit.ly/3in2Hd4